# சிலுவைப்பாதை

- திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ்

## தொடக்க செபம்

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!

எல்லோரும்: இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச்சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

## சுருக்கமான மனத்துயர் செபம்:

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன்.

*எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக,*

*இறைவா, என்மேல் இரக்கமாயிரும்.*

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சிலுவைப்பாதை நிலையின் தொடக்கத்தில்

இயேசு கிறிஸ்து பாடுபட்ட ----ஆம் நிலை

இயேசுவே! உமது திருச்சிலுவையை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஏனெனில் உமது திருச்சிலுவையால் நீர் எங்களை மீட்டருளினீர்.

## சிலுவைப்பாதை நிலையின் முடிவில்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே

எங்கள் மேல் இரக்கமாயிரும் - 2

இறந்த நம்பிக்கையாளர்கள் உமது இரக்கத்தினால் உம்மில் நிறைவாழ்வு பெறுவார்களாக! ஆமென்.

## முன்னுரை

மனிதர்களாய் உலகிற்குள் நுழைபவர்கள் அனைவரும் பயணிக்கிற பாதை பல்வேறுபட்டதுதான். தனக்கென ஒரு பாதை என்று சிலரும், பிறரின் அடிச்சுவட்டைத் தேடிப் பலரும் பின்பற்றியே வாழ்க்கையில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சீர்குலைத்த உலக சமூகத்தைச் சீர்படுத்த பிறப்பெடுத்த இயேசு பயணித்ததோ சிலுவைப்பாதையில். கடவுளானவர் எளிமையைத் தரித்து மனிதனாகி மாண்புறச் செய்த பாதையே சிலுவைப்பாதை. உண்மையற்ற சமுதாயத்தை உயிர்ப்பிக்க, இன்னுயிரை ஈந்த பாதை இச்சிலுவைப்பாதை. சிவப்புக் கம்பளம் விரித்த பாதை அல்ல. சிந்திய இரத்தம் கொண்டு செம்மையாக்கிய பாதை. இயேசு கடந்த சிலுவைப் பாதையைத் தியானிக்கும் நாம், தற்போது நடந்து கொண்டிருக்கும் சிலுவைப்பாதைகளை, சிலுவைகளை நிதமும் சுமந்து கொண்டிருக்கும் இயேசுக்களை நம் கண்முன் கொண்டு வருவோம். நான் யாருடைய சிலுவைக்கும் காரணமில்லை என்று தன்னை நியாயப்படுத்தி ஒதுங்கிச் செல்லாமல், அவர்களின் சிலுவையின் அழுத்தத்தைக் குறைக்க நம் தோள் கொடுப்போம். கழுத்தின் சிலுவைகள் இதயத்தை தொடும்போதெல்லாம் இயேசுவின் இரத்தம் இதயத்தினுள் ஊற்றப்பட வேண்டும். வேடிக்கைப் பார்ப்போரில் ஒருவராக நின்றுவிடாமல், இயேசுவை மனதில் கண்டு அவரோடு பயணிக்க புறப்படுவோம்.

## முதல் நிலை

### இயேசுவுக்கு மரணத் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

மண்ணுலகைப் படைத்த மகிமை பொருந்திய மைந்தனுக்கு மரண தண்டனை வழங்கி மன்னிக்க முடியாத குற்றத்தை இழைக்கிறது பிலாத்துவின் நீதிமன்றம். அரக்கர்கள் அதிகாரம் பெறும் போது அக்கிரமங்கள் அனுமதிக்கப்படுகிறது. இன்றைய சூழலும் எத்தகைய வேற்றுமையையும் காட்டவில்லை. நீதியற்ற மன்றங்களில் நீதி விற்பனை செய்யப்படுகிறது. நீதியின் கழுத்து நெரிக்கப்படும்போதெல்லாம் நமது சுவாசமே தடைபடுகிறது என்பதை உணர்ந்து எளியவனுக்காகவும், வறியவனுக்காகவும் வழக்காட முனைவோம். நீதியற்ற தீர்ப்பை எதிர்ப்போம்.

**செபம்**

நீதியின் மீது வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் என்ற இயேசுவே! அநீதி தலையெடுக்கும்போது நீதிக்காக குரல் எழுப்பவும், போராடுபவர்களுக்கு தோள் கொடுக்கவும் துணிவையும், வேட்கையையும் தாரும். - ஆமென்.

## இரண்டாம் நிலை

### இயேசுவின் தோளில் சிலுவை சுமத்தப்படுகிறது.

இயேசுவின் தோள்கள் சிலுவைக்கு தம்மை இடங்கொடுக்கிறது. கடினமான சிலுவை கள்ளமற்ற இயேசுவின் தோள்களைத் தொட்டதும், பாவத்தின் கறை மறைந்து, பரிகாரப் பொருளாய் மாறிவிட்டது. குற்றமே அறியாத குழந்தை போன்றவர் செய்யாத குற்றத்திற்காக சிலுவையைத் தமதாக்குகிறார். கொட்டும் குருதியோடு மெல்ல மெல்லப் பயணிக்கிறார். மகிமை இங்கே மௌன ஊர்வலம் நடத்துகிறது. மரத்துப் போன மனித இதயங்கள் வேடிக்கைப் பார்க்கிறது. இந்த உலகம் துன்பங்களை அனுபவிப்பது அராஜகத்தை அரங்கேற்றும் கெட்டவர்களால் அல்ல. அதை அமைதியுடன் பார்த்துக் கொண்டிருக்கும் நல்லவர்களால்தான்.

**செபம்**

சுமைகளால் சோர்வுற்ற இறைவா! காயங்களை ஏற்படுத்துபவர்களாக இல்லாமல், காயங்களுக்கு மருந்தாக மாறவும், வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நாங்களாக இருக்க வரம் தாரும். - ஆமென்.

## மூன்றாம் நிலை

### இயேசு முதல் முறை தரையில் விழுகிறார்.

மனிதன் விழலாம், தெய்வம் விழலாமா? பட்டமரம் விழலாம், பச்சை மரம் விழலாமா? சுமைகள் சாயலாம், சுமைதாங்கி சாயலாமா? மனித நேயங்கள் மறுக்கப்படவே மண்ணை முத்தமிடுகிறார் இயேசு. பொன்னிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை நம் வீட்டுப் பெண்ணிற்கு கொடுப்போம். பணத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை நம்மிடையே வாழும் எளிய மனத்திற்கு கொடுப்போம். பிறரை விழ வைக்க நம் கால்களை நீட்டாமல், விழுந்தவரை எழ வைக்க நம் கரங்களை நீட்டுவோம். தள்ளாடுபவனை தாங்கிப் பிடிப்பதும், விழுந்தவனை தூக்கி நிறுத்துவதும் மனித மாண்பன்றோ?

**செபம்**

விழுந்தும் தன் முயற்சியால் எழுந்து நடந்த இயேசுவே! வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளிலும், தவறி விழும் நேரங்களிலும் துவண்டு விடாமல் மனவுறுதியுடன் செயல்படும் மனப்பக்குவத்தைத் தாரும். - ஆமென்.

## நான்காம் நிலை

### தாயும் சேயும் சந்திக்கிறார்கள்.

வலுவிழந்த கால்களும், களை இழந்த முகத்தையும் ஒளி பொருந்திய அன்னை மரியின் கண்கள் நோக்குகின்றன. தாயின் சந்திப்பு மகனுக்கு வலுவூட்டுகிறது. தன் மகனை உலகிற்காக அர்ப்பணித்த பெருமை இருப்பினும், தாய்மைக்கே உரிய பாசம் விழிகளை ஈரமாக்குகிறது. இறைவனின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற எல்லாச் சவால்களையும் சந்தித்து உதவிய அன்னை மரியாளின் உள்ளத்தை நாமும் பெற்றிடுவோம். பெண் என்றாலே கவர்ச்சிப் பொருளாய் இன்றைய ஊடகங்களுக்கு இரையாகிக் கொண்டிருக்கிறாள். முதிர் வயதடைந்த தாய்மை, முதியோர் இல்லத்தில் நாட்களை எண்ணுகிறது. தாய்மையைத் தாங்குவோம். பெண்மையைப் போற்றுவோம்! மரியின் மனப்பான்மையை நமதாக்குவோம்.

**செபம்**

தாயை நேசித்த அன்பு இயேசுவே! நாங்கள் தாயின் அன்பையும். அவர்களின் தியாக வாழ்வையும் உணர்ந்து, அவர்களுக்கு பணிவிடை செய்து வாழும் வரம் தாரும். - ஆமென்.

## ஐந்தாம் நிலை

## களைத்துப் போன இயேசுவுக்கு கரம் நீட்டி உதவிய சீமோன்.

வேடிக்கையாளர்களின் மத்தியில் உதவிக்கரங்களை நீட்டுகிறார் சீமோன். அவமானச் சின்னத்தையும் அனுசரனையோடு சுமக்க முன்வருகிறார். உதவி செய்பவனுக்கே உதவி பெறவும் உரிமை உண்டு. யாரும் தனித்து வாழ முடியாது. பிறரின் உதவிகள் நம் வாழ்க்கையை நகர்த்த உதவும் சக்கரங்கள் என்பதை அறிந்து கொள்வோம். நாமும் பிறர் வாழ்விற்கு சக்கரங்கள் ஆவோம்.

**செபம்**

சுமை தாங்கியான இயேசுவே! பிரதிபலன் எதிர்பார்க்காமல் உதவி செய்த சீமோன் போல நாங்களும் தேவையிலுள்ளோரைத் தேடிச் சென்று உதவிட மனம் தாரும். - ஆமென்.

## ஆறாம் நிலை : வீரப்பெண் வெரோணிக்கா.

உறவுகள் ஒதுங்கிவிட, உடனிருந்த சீடர்களும் ஓடி விட, இரத்தக் கறை படிந்த இயேசுவின் திருமுகத்தை கனிவான வெரோணிக்காவின் கரங்கள் துடைக்கிறது. உலகை இரட்சிக்க வந்தவரை வெண் துணியால் அர்ச்சித்தாள் வெரோணிக்கா எனும் வீரப்பெண். உலகத்தில் நடக்கும் போரை நிறுத்த வேண்டாம், நம் தெருவிலும் வீட்டிலும் நடக்கும் சிறு சிறு தவறுகளை திருத்துவதற்காகவாவது நம் கரங்களை இணைப்போம்.

**செபம்**

உலக இரட்சகரே எம் இறைவா! இச்சமுதாயத்திற்கு நல்லது செய்ய முனைபவர்களை உற்சாகப்படுத்தும் தைரிய மனநிலையைத் தந்தருளும். - ஆமென்.

## ஏழாம் நிலை

## மாபரன் இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

உன்னதரின் உள்ளம் உறுதியாய் இருப்பினும், சிலுவையின் பாரமும், சிந்திய இரத்தமும் ஒன்றுபட இரண்டாம் முறை மண்ணை முத்தமிடுகிறார் இயேசு. கீழே விழுந்த விதைகள்தான் விண்ணை நோக்கும் மரங்களாகின்றன. இயேசுவும் விதையாக விழுகிறார் விருட்சமாக எழுவதற்காக. வாழ்க்கைப் பயணத்தில் நாமும் புதுவாழ்வு பெற விழுந்த நிலையிலிருந்து எழுவோம்.

**செபம்**

விழுந்தாலும் துணிவோடு எழுந்து பயணித்த இறைவா! தடைகள் எங்கள் வாழ்வில் ஆயிரம் வந்தாலும், உம்மோடு இணைந்து வாழ வரமருளும். - ஆமென்.

## எட்டாம் நிலை

### ஆறுதல் அளித்த ஆண்டவருக்கே ஆறுதல்.

இதயத்தில் ஈரமுள்ள எருசலேம் நகரத்து பெண்களால் இயேசுவின் பாடுகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மனதின் பாரம் விழிகளில் வெளிப்படுகிறது. கல் நெஞ்சத்தார் நடுவே கண்ணீரோடு நடக்கும் மகளிர்க்கு ஆறுதல் கூறுகிறார் இயேசு. வருந்துகிற நல் உள்ளங்களுக்கு உடைந்த உள்ளத்தோடு இயேசு உறுதிப்படுத்துகிறார். பெண்கள் தான் உயிர்களைக் கொடுக்கும் உன்னதக் கருவூலம் என்பதை ஏற்றுக் கொள்வோம்.

**செபம்**

எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் மொழிந்த மாசற்ற இயேசுவே! இன்று நாட்டில் நடக்கும் அவலச் செயல்களை மாற்றி இறைவனின் உன்னதத்தை உணர்ந்து வாழ வரமருளும். - ஆமென்.

## ஒன்பதாம் நிலை

### மூன்றாம் முறை நிலைகுலைந்து தடுமாறும் இயேசு.

பாரமான சிலுவை, பார்வை மங்கிய விழிகள், கயவர்களின் கசையடி எனப் பார்க்கின்ற ஒவ்வொன்றுமே இயேசுவைக் கீழே தள்ள நிலைகுலைந்து மண்ணில் விழுகிறார். விழாமலேயே வாழ்ந்தான் என்பதைவிட விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை. தளராத இதயமுள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது எதுவுமே இல்லை என்பதை நிரூபித்த இயேசு போல விழுவதெல்லாம் எழுவதற்கு தானே தவிர அழுவதற்கு அல்ல என்பதை சிந்தனையில் இருத்துவோம்.

**செபம்**

விழுந்ததும் எழுந்தவரே எம் இறைவா! தடைகளைக் கண்டு மனம் சோர்ந்து போகாமலும், வீழ்ந்து விடாமலும் வீழ்ந்தவர்களை நம்பிக்கையூட்டி எழுப்பிவிடும் உள்ளத்தைத் தர வரமருளும். - ஆமென்.

## பத்தாம் நிலை : அவமானத்தின் உச்சக்கட்டம்.

உடலை வருத்தியவர்கள், உணர்வையும் வருத்தி களங்கமில்லா இறைவனைக் கலங்க வைக்க ஆடைகளை அகற்றுகிறார்கள். மனித மாண்பு மறுக்கப்பட்ட நிலையில் மானிடமகன் மௌனம் சுமக்கிறார். உடலாகிய ஆலயத்தை பாவத்திற்கும், அசிங்கத்திற்கும் ஆளாக்கும்போதெல்லாம், இயேசு தன் ஆடையை இழக்கிறார். பிறரின் குறைகளைத் தனிமையிலும், நிறைகளைப் பலர் அறியச் சொல்லும் போது இயேசுவை மகிழ்ச்சிக்குள்ளாக்க முடியும். கர்வம், மமதை எனும் பகட்டான ஆடைகளை நம்மிடம் களைவோம், மனிதம் எனும் ஆடையை அணிவோம்.

**செபம்**

மாண்பும் மகத்துவமும் மாட்சியும் நிறைந்த இறைவா! எங்களுக்குள் இருக்கும் போலித்தனங்களை அகற்றி, மனித மாண்பை அணிந்து மனித நேயத்துடன் வாழ வரமருளும். - ஆமென்.

## பதினொன்றாம் நிலை

### இயேசு சிலுவையுடன் ஆணிகளால் இணைகிறார்.

குணமாக்கிய கரங்களும், நற்செய்திக்காக நடைபோட்ட கால்களும், கூரிய ஆணிகளால் சிலுவையில் அறையப்படுகிறது. இதயத்தின் அன்பை ஈந்தளித்தவர்க்கு ஈட்டு எனும் பரிசு. இன்றைய சூழலிலும் வறுமை எனும் ஆணிகள் வறியவர்க்கு, அக்கிரம குற்றச்சாட்டு எனும் ஆணிகள் வலுவில்லாதவனுக்கு. இன்னும் எத்தனையோ ஆணிகளால் இச்சமூகம் அறையப்பட்டுள்ளது. இயேசு ஆணிகளை இன்முகமாய் ஏற்று நம்மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துகிறார். நாமும் பிறரின் துன்பங்களுக்கு காரணமாயிராமல், மகிழ்ச்சிக்கு காரணமாய் இருப்போம்.

**செபம்**

ஆணிகளால் துளைக்கப்பட்ட என் இயேசுவே! எங்களிடமிருந்து சுயநலத்தை அகற்றி, பிறர்நலம் பேணும் நேசமுள்ளவர்களாக வாழ வரமருளும். - ஆமென்.

## பன்னிரண்டாம் நிலை

### சிகரம் சிலுவையில் தொங்குகிறது, தியாகம் சுடர்விடுகின்றது.

இயேசுவின் ஜனனம் சாதாரணமானதுதான்; ஆனால் மரணம் சாதனையானது. உலகினை மீட்டெடுக்க உயிரைத் துறக்கிறார் இயேசு. உன்னத அன்பின் வெளிப்பாடு இதுதான். பாடுகள், அவமானங்கள், வேதனைகள், கடைசியில் மரணம் என “எல்லாம் நிறைவேறிற்று” என ஜீவனைக் கையளிக்கிறார் இயேசு. படைக்கப்பட்ட நாம் அனைவரும் காரணத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளோம். நல் நினைவு எனும் பொக்கிஷங்களை விட்டுச் செல்வோம். இறக்கும்வரை இரக்கத்தோடு வாழ்வோம்.

**செபம்**

எனக்காக உயிரைத் தந்தவரே எம் இறைவா! என்னை மன்னித்து, இனிமேலாவது முழு வாழ்வு வாழ போராட வேண்டும் என்ற மனநிலையைத் தாரும். - ஆமென்.

## பதின்மூன்றாம் நிலை

### அன்னை மரியாவின் மடியில் இயேசுவின் உயிரற்ற உடல்.

உலகை மீட்க உன்னத மரணம் அடைந்த மைந்தனை மடியேந்தி அமைதியாய் துயரத் தாலாட்டினை இசைக்கிறது மரியன்னையின் மனம். இறந்தவருக்கு உயிர்கொடுத்தவர் இறந்து கிடக்கிறார். இது யாருக்காக? என்று வீரமகனை மடியேந்தி, புலம்புகிறார் மரியன்னை. சிறு துன்பத்திற்கே துவண்டு விழும் மனிதர்கள் மத்தியில், அனைத்தையும் மனதில் இருத்திச் சிந்திக்கிறார். நாமும் இயேசு போல நம் தாய்மார்களை பூரிப்பு அடைய வைக்க, நமது செயல்களை நல்வழிப்படுத்துவோம்.

**செபம்**

அன்னை மரியே! எங்கள் தாயே! எங்கள் வாழ்வில் நாங்கள் எங்கள் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடையும்படியாக, எங்கள் வாழ்வை அமைத்திட உம் திருமகனிடம் எங்களுக்காக மன்றாடும். - ஆமென்.

## பதினான்காம் நிலை

### இறைமகனின் உயிரற்ற உடல் மண்ணில் விதைக்கப்படுகிறது.

மாற்றான் கல்லறையில் மானிடமகன் துயில் கொள்கிறார். இவ்வுலகில் வாழ்ந்தபோது சொத்து சேர்க்கவில்லை. அழியாத சொத்தாகிய நல் உள்ளங்களே அவர் சொத்து. அக்கிரமக்காரர்கள் இறந்து அடக்கம் செய்யப்படுவது இயற்கை. ஆனால் இரக்கம் காட்டியவர், மன்னித்தவர், அநீதியை எதிர்த்தவர் இயேசு. நொறுக்கப்பட்டதும், அடக்கம் செய்யப்பட்டதும், இறையாட்சி விருட்சமாய் இம்மண்ணில் மலர்ந்திடவே. அன்பிற்கு அழிவில்லை. இரக்கத்திற்கு இறப்பில்லை. நாமும் பழமையை அடக்கம் செய்து புதிய மனிதர்களாக, புதுவாழ்வு பெற்றவர்களாக உயிர் பெற்று எழ முனைவோம்.

**செபம்**

எங்களுக்காக சாவிற்கு உட்பட்ட இயேசுவே! நாங்கள் எங்கள் பாவ வாழ்வில் அடக்கம் செய்யப்பட்டு, புதிய மனிதர்களாக உம்மோடு மாற்றுரு பெற்று வாழ வரமருளும். - ஆமென்.

## சிலுவைப்பாதை முடிவில்

பொறுத்தருளும் கர்த்தாவே!

உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

என்றென்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் சுவாமி.

தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

## திருத்தந்தையின் கருத்துக்களுக்காக…

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே.

புனித மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். / ஆமென்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்!